DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 451/2024

Miscellaneous :

Sessions : PW –1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அருண்ராஜ் |
| Father / Husband Name | அமுர்தாஸ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 17.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது கரும்பாக்கம் கிராமத்தில் வசித்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். 06.07.2024 அன்று மதியம் என் அக்கா போன் செய்து தனசேகரன் என்பவர் என் அக்கா மகன் பரத் என்பவரை அடித்துவிட்டதாக சொன்னார்கள். அடிப்பட்ட என் அக்கா மகனை முதலில் என் அக்கா அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கு சிகிச்சை அளிக்க முடியாமல் சென்னை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார். என் அக்கா நடந்த சம்பவம் பற்றி என்னை போலிசில் புகார் அளிக்க சொன்னார். நான் மதுராந்தகம் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவம் நடந்த போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். புகாரை நான் 07.07.2024 அன்று கொடுத்தேன். புகாரை கொடுக்க சென்ற போது காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. விசாரணையின் போது முதல் விசாரணையில் உள்ள அனைத்து விவரங்களையும் சொன்னேனா என்றால் சொன்னேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் என்னுடன் கூட வந்த ஒரு நபர் நான் சொன்ன புகாரை எழுதினார். தனசேகர் குடும்பத்திற்கும் பரத் குடும்பத்திற்கும் ஏற்கனவே பிரச்சினை இருந்தது. பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 451/2024

Miscellaneous :

Sessions : PW -2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பரத் |
| Father / Husband Name | துரை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 17.07.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தண்டலம் கிராமத்தில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். ஏற்கனவே எங்கள் வீட்டிற்கும் என் அப்பாவின் தங்கை வீட்டிற்கும் நிலம் சம்மந்தமான பிரச்சினை இருந்தது. அதற்கு என் அத்தையும் புகார் கொடுத்தார். நாங்களும் புகார் கொடுத்திருந்தோம். 06.07.2024 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் எங்கள் பக்கத்து ஊரில் தண்டரைப்பேட்டையில் நடந்த பாட்டு கச்சேரிக்கு நான் சென்றிருந்தேன். அங்கு நான் என் நண்பர்களுடன் பேசி கொண்டிருந்த போது ஆஜர் எதிரி வந்து என்னை தேவிடியா பையா என்றும் மேலும் அசிங்கமாக திட்டி என்னை கையால் அடித்தார். நானும் கை ஓங்கினேன். அதன்பிறகு அவர் சென்றுவிட்டார். நான் என் நண்பர்களுடன் பேசி கொண்டிருந்த போது பின்னால் வந்த கட்டிங்பிளேயரால் என் பின் மண்டையில் அடித்து நான் திரும்பி பார்க்கும் போது என்னுடைய வலது பக்க கண்ணருகில் கட்டிங்பிளேயரால் அடித்துவிட்டார்.

2. நான் மயங்கி விழுந்துவிட்டேன். என்னை என்னுடைய நண்பர்களே மதுராந்தகம் அரசு மருத்துவனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கிருந்த மருத்துவர்கள் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல சொன்னார்கள். செங்கல்பட்டு முதலுதவி சிகிச்சை அளித்தனர். பின்னர் என்னை மேல்சிகிச்சைக்காக எக்மோர் கண் மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். நான் சென்னை எக்மோர் அரசு கண் மருத்துவமனையில் 1 1/2 மாதம் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். நான் எக்மோர் மருத்துவ மனையில் இருந்த போது போலிசார் என்னை விசாரித்துவிட்டு எங்கள் ஊர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார்கள். அதன் பிறகு என் மாமா மதுராந்தகம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

3. எதிரி கட்டிங்பிளேயரால் என்னை பின்மண்டையில் அடித்ததாக போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 07ம் தேதி விசாரித்தார்கள். இந்த வழக்கின் விசாரணை அதிகார் என்னை விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்த போது என் மாமா இல்லை. எதிரியின் அண்ணன் எனக்கு எதிராக மருவத்தூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.159/2024 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அந்த வழக்கில் எனக்கு தொடர்பு இல்லை. ஏற்கனவே நடந்த சண்டையில் நான் எதிரியின் அண்ணன் வீரமுத்து என்பவரை தலையில் அடித்துவிட்டேன் என்றால் அவர் என்னை டெஸ்டரால் கையில் குத்திவிட்டார். என்னால் வலி தாங்கமுடியாமல் குத்திவிட்டேன். பட்டியல் சாட்சி–3 எனக்கு யார் என்று தெரியாது. பட்டியல் சாட்சி–4 எனது சித்தப்பா பட்டியல் சாட்சி5 மற்றும் 6 எனது ஊர்கார்கள் தான். எதிரியின் அண்ணன் வீரமுத்துவை அடித்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 451/2024

Miscellaneous :

Sessions : PW -3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | முனியாண்டி |
| Father / Husband Name | |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 17.07.2025

**முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது தண்டரை பேட்டை கிராமத்தில் குடியிருந்த விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். போன வருடம் 7 வது மாதம் 06 ம் தேதி இரவு 9.30 மணிக்கு தண்டரைபேட்டை கிராமத்தில் எனது வீட்டிற்கு பரத் வந்தார். எங்கள் ஊர் கூத்து மேடையில் நண்பர்களுடன் பேசி கொண்டிருந்த போது அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. நான் பரத்தை எனது வீட்டிற்கு அழைத்து வரும் போது பஞ்சாயத்து அலுவலகம் அருகே வரும் போது ஆஜர் எதிரி பரத்தை பார்த்து ஏன் இங்க வந்து பிரச்சினை செய்தார் நான் சமாதானம் செய்து அனுப்பிவிட்டேன். அதற்கு பின்னர் தண்டலம் பஸ்டாண்டு அருகே எதிரி பரத்தை கட்டிங்பிளேயரால் கன்னத்தில் குத்திவிட்டார். பின்னர் காயம்பட்டவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு முடியாது என்பதால் சென்னை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார். போலிசார் விசாரணை செய்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

**2.** பரத் என்னுடைய அண்ணன் மகன். பரத் எங்கள் ஊர் கூத்து மேடை அருகே நண்பர்களுடன் சண்டை போட்டதால் நான் என்வீட்டிற்கு அழைத்து வந்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். எங்கள் ஊராட்சி மன்றம் அருகில் தனசேகர் பரத்துடன் பிரச்சினை செய்தார் என்பதை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். தண்டலம் பேருந்து நிலையம் அருகே எதிரி பரத்தை அடித்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை. பரத் என்னுடைய அண்ணன் மகன் என்பதால் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.